# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,224 — 1921 ம் ஹூ கார்த்திகைமீ 11 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### தேசாதிபதியவர்களின் விளம்பரம்.

பெரிய பிரித்தானியாவும் அயர்லாந்தும்சேர்ந்த ஐக்கிய இராட்சியத்தினதும் கடல்களுக் கப்பாலுள்ள ஆதிபத்தியங்களினதும் அரசரும் சமயபரிபாலகருமாகிய மகத்துவம்பொருந்திய ஐந்தாம் ஜோர்ஜ் வேந்தரின் நாமத்தினாலே:

இலங்கையையும் அதைச்சேர்ந்த நாடுகளையும் ஆளுகிறவரும் சைனிய படைத்தலைவரும் அதிக மாட்சிமைதங்கிய
பாத்வரிசையின் கொம்பானியன் பட்டத்தவரும் அதிஉத்தம பிரித்தானிய சககிராதிபத்திய வரிசையின்
நயிற்கொம்மான்டர் பட்டத்தவரும் மேன்மைபொருந்திய சென் மைக்கேல் அன் சென்
ஜோர்ஜ் என்னும் வரிசையின் நயிற் கிறன்ட் குறேஸ் பட்டவர்த்தனருமாகிய
உத்தமனார் சேர் உவில்லியம் ஹென்றி மனிங் அவர்களால் செய்யப்படும்

### விளம்பரம்.

டபிழ்யு. எச். மனிங்.

1910 ம் ஆண்டின் 6 ம் இலக்கச்சட்டத்தின் 109 ம் பிரிவின் (1) அதும் 1919 ம் ஆண்டின் 2 ம் இலக்கச்சட்டத்தின் 195 ம் பிரிவினதும் பிரகாரம் கீழே சொல்லப்படும் உபவிதிகள் கொழும்பு நகரசங்கத்தாரால் செய்யப்பட்டு 1910 ம் ஆண்டின் நகரசங்க சட்டத்தின் 109 (3) ம் பிரிவின் பிரகாரம் அரசாங்க நிருவாக சபையோடு தேசாதிபதியவர்களால் அங்கீகரிககப்பட்டிருப்பதால்: A & B அட்டவணைகளில் குறித்திருக்கும் மேற்குறித்த உபவிதிகளை குறித்த தேசாதிபதியாகிய நாம் இத்தால பிரசுரப்படுத்துகிறோமென்று நீவீர் அறிந்துகொள்வீர்களாக.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தோராம் ஆண்டு நவம்பர்மாதம் எட்டாந் தேதியாகிய இன்று மேல்சொல்லிய இலங்கைத்தீவிலுள்ள கொழும்பில் கொடுக்கப்பட்டது.

உத்தமனாரவர்களின் கட்டளைப்படி,
கிறேய்ம் தோம்சன்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1921 ம் ஹூ அக்டோபர்மீ 26 ந் உ.

கடவுள் மன்னரைக் காக்க.

### அட்டவணை A.

1919 ம் ஆண்டின் 2 ம் இலக்கச் சட்டத்தின் 195 (a) என்றிலக்கமிட்ட பிரிவின் ஏற்பாட்டுக்கிணங்க பிரசித்த மலசலங் கழிக்குமிடங்களின் உபயோகிப்பை ஒழுங்குபடுத்துதல் விஷயமாயும் இவ்விடங்களை யுபயோகிக்கும் சனங்களின் ஒழுங்கான நடத்தை விஷயமாகவும் செய்த உபவிதிகள்.

1. எந்தப் பிரசித்த மலசலங் கழிக்குமிடத்திலும் தட்டிலல்லாது வேறொரு இடத்திலும் ஒருவரும் மலங்கழிக்கக் கூடாது; சலம்விடவென்று ஒழுங்குசெய்த இடத்திலல்லாது வேறொரு இடத்திலும் சலம்விடவும்படாது.

2. எந்தப்பிரசித்த மலசலங்களிக்குமிடத்திலும், எவராவது உடுப்புச் சீலை துணி முதலியன தோய்க்கவும்படாது; சட்டிபானை முதலிய வீட்டுச்சாமான்களையாவது ஏதும் மிருகஙகளையாவது கழுவவும்படாது.

3. எந்தப்பிரசித்த மலசலங்கழிக்குமிடத்திலும், தட்டுகள் நீர்க்கால்களுக்குள்ளாவது கான்களுக்குள்ள வேறு ஈவுகளுக்குள்ளாவது கல் மண் சாம்பல் செங்கல்லேயாவது அந்தக்கானுக்குள் போடத்தகாத வேறெந்தச்சாமானேயாவது போடக்கூடாது.

4. எந்தப் பிரசித்த மலசலங் கழிக்குமிடத்திலுமுள்ள தட்டு, குழாய் (பயிப்பு), தண்ணீர்தாங்கி வால்வ் என்பவற்றையாவது அங்குப் பூட்டியிருக்கும் மற்றைய துணையுறுப்பு உபகரணங்களையாவது அடைத்துப் பழுதுபடுத்தி அப்புறப்படுத்தவும்படாது; வேறெந்தவிதமாயாவது அங்குள்ள இருக்கையைப் பிணையலை சீரை மாற்றவுங்கூடாது; அங்குள்ள தரையைச் சுவரை முகட்டையாவது கட்டிடத்தின் எந்தப் பகுதியையாவது வேண்டுமென்று விகாரப்படுத்தி அழித்துப் பழுதாக்கி ஊறுசெய்யவும்படாது.

5. அரசாங்க அதிகாரியாயேனும் தமக்குரிய கடமை பார்ப்பவராயேனும் இராத ஒருவரும் ஆண் பெண் பாலாருள் தமக்கு வேறான மற்றைய பாலார் உபயோகிப்புக்கென்று விட்ட மலசலங் கழிக்குமிடத்தின் எப்பகுதிக்குள்ளாவது உபயோகிப்புக்கு விடாமல் அப்போதைக்கு மூடியடைக்கப்பட்டிருக்கும் மலசலங் கழிக்குமிடம் அல்லது அதன் ஒரு பகுதியாகிய இவைக்குள்ளாவது போகக்கூடாது.

6. எந்தப் பிரசித்த மலசலங் கழிக்குமிடத்திலுமுள்ள ஏவற்காரன் காவற்காரன் பார்வைக்காரன் ஆகிய எவரையேனும், அவர் தமது கடமையைச் செய்யும்போது அலைத்துத் தடுத்து ஒருவிதமான தொந்தரவுஞ் செய்யவும்படாது; அவருடைய முறைமையான கட்டளையொன்றையும் மீறி நடக்கவும்படாது.

7. பிரசித்த மலசலங் கழிக்குமிடம் எந்த நோக்கமாக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தேயன்றி யொருவரும் அப்படிப்பட்ட மலசலங் கழிக்குமிடத்துக்கு அடிக்கடி போகவும்படாது, அங்கு தங்கியிருக்கவும்படாது.

8. தொத்து நோயால் வருந்துபவரெவரும் பிரசித்த மலசலங் கழிக்குமிடத்துக்குட் போகக்கூடாது.

9. தண்டங்கள்.—இந்த உபவிதிகளிலுள்ள ஏற்பாடுகளிலெதையாவது எவரேனும் மீறி நடந்தால், அவர் குற்றஞ் செய்தவராகக் கவனிக்கப்படுவார்; குற்றவாளியாகக் காணப்பட்டால் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத அபராதத்துக்கு ஆளாவர்.

## அட்டவணை B.

கான்கள் மலசலகூடங்களையும் மற்றைய சுகத்துக்குரிய உபகரணங்களையும் சுத்தப்படுத்தல் பரிசோதித்தற்காக உரிய வேதனங்களை விதித்தல் திரட்டல் அறவாக்கலைப்பற்றியும், சாய்க்கடை வேலை நடத்தும் ஆட்களுக்கு உத்தரவுச்சீட்டுக் கொடுப்பதைக் கிரமப்படுத்தலைப்பற்றியும், அந்த உத்தரவுச்சீட்டுகள் எந்த நிபந்தனைகளுக்கடங்கக் கொடுக்கப்பட்டு உபயோகிக்கப்படவேண்டு மென்பதைப்பற்றியும், குறித்த சாய்க்கடைவேலை எவ்விதமாகச் செய்யப்படவேண்டு மென்பதைப்பற்றியும், குறித்த உத்தரவுச்சீட்டின்பொருட்டு வேதனங்களை யறவாக்குதலைப்பற்றியும், இவைகாரணமாகச் செய்யும் சோதனைகளைப்பற்றியும், மேற்கூறியவைகளைப்பற்றிச் செய்யும் ஏற்பாடுகளி லெதையாவது மீறிநடந்தால் 100 ரூபாவுக்கு மேற்படாமல் அபராதம் விதிப்பதைப்பற்றியும், 1919 ம் ஆண்டின் 2 ம் இலக்கச் சட்டத்தின் 195 ம் பிரிவின் பிரகாரம் செய்த உபவிதிகள்.

உத்தரவுபெற்றுச் சாய்க்கடை வேலை செய்யும் ஒப்பந்தக்காரரைப்பற்றியும், சாய்க்கடைகளைப் பரிசோதித்தல் சுத்தமாக்குதலைப்பற்றியும், 1919 ம் ஆண்டின் 2 ம் இலக்கச் சட்டத்தின் 195 ம் பிரிவின் (b), (c) என்ற உப பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் இயற்றிய உபவிதிகள்.

சொற்பொருள் விளக்கம்.—இந்த உபவிதிகளின்பொருட்டு, "நகரத்துச் சுகாதா இஞ்சினீர்" என்னும் சொற்றொடர் கொழும்பு நகரசங்கத்து (நகரசங்கத்துச்) சுகாதார இஞ்சினீரையும், இதன்பின் குறிக்கப்படும் சாய்க்கடை வேலைகளை மேற்பார்க்க அல்லது அதிகரித்து நடத்தவாவது, சாய்க்கடைகள் மலசல கூடங்களையும் மற்றச் சுகத்துக்குரிய உபகரணங்களையும் சுத்தப்படுத்திப் பரிபாலனம் செய்தற்காகவாவது, கொழும்பு நகராதிகார சங்க அக்கிராசனரவர்களால் முறைமையாக நியமிக்கப்பட்ட வேறெந்த உத்தியோகத்தரையும் கருதும்.

### முதலாம் பாகம்.

### கான்களைச் சுத்தப்படுத்தல் பரிசோதித்தல் விஷயமானவை.

I. சாய்க்கடை வேலைகளைப் பரிசோதித்துச் சரிபிழைபார்ப்பதற்காகப் பின்னே குறிக்கப்படும் வேதனங்கள் விதிக்கப்படுவனவாகும். இவை வேலையை ஏற்று நடத்தும் சாய்க்கடை வேலை ஒப்பந்தக்காரனுற் கொடுக்கப்படுவனவாகும்:—

| | ரூ. | ச. |
|---|---|---|
| (1) எந்தக் கட்டிடத்துக்கேனும் வளவுக்கேனும் சாய்க்கடைகள் வைக்கும்பொருட்டு அனுப்பி அனுமதி பெற்றுக்கொண்ட ஒவ்வொரு பிறம்பான விண்ணப்பப் பத்திரத்துக்கும் அல்லது ஒரு கட்டிடத்திலோ வளவிலோவுள்ள சாய்க்கடைகளுக்கு மாறுதல்கள் மேலதிகமான வேலைகளுக்கு .. .. | 5 | 0 |
| (2) ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரத்தின் பிரகாரமும் ஒன்றுக்கு மேலதிகமாக மழைத்தண்ணீர் சாய்கானுக்கேனும் மற்றைய சாய்கானுக்கேனும் செய்யும் தொடுவை ஒவ்வென்றுக்கும் .. .. | 5 | 0 |
| (3) ஒவ்வொரு விண்ணப்பத்தின்பேரானும் இரண்டுக்கு மேலதிகமாக மலசலங்கழிக்கு மிடத்துக்குள்ள ஒவ்வொரு தட்டுக்கும் .. .. .. .. .. .. | 3 | 0 |
| (4) ஒவ்வொரு விண்ணப்பத்தின்பேரானும், சாய்க்கடை வேலை ஒப்பந்தக்காரனுடைய பிழையானதும் குறையானதுமான வேலைபற்றி நகரசங்கத்துச் சுகாதார இஞ்சினீர் அவசியமென்று கண்டபடி செய்யும் மேலதிகமான முடிவான சரிபிழைபார்த்தல் ஒவ்வொன்றுக்கும் .. .. .. | 5 | 0 |

II. கான்கள் மலசலகூடங்களையும் மற்றைய சுகத்துக்குரிய உபகரணங்களையும் சுத்தப்படுத்தற்குரிய வேதனங்கள்:—

(1) கான்கள் மலசலகூடங்களையும் மற்றைய சுகத்துக்குரிய உபகரணங்களையும் சுத்தப்படுத்துவதற்குப் பின்னுற் குறிக்கப்படும் வேதனங்கள் விதிக்கப்படுவனவாகும் (கான்களிலுள்ள தடைகளை எடுத்துவிடுவதும் சுத்தப்படுத்துவதாகவே கவனிக்கப்படும்) வளவிற் குடியிருக்கிறவராலே இவ்வேதனங்கள் நகரசங்க அக்கிராசனருக்கு கொடுக்கப்படவேண்டும். ஒருவர் தனியே குடியிராமற் பலருக்குப் பகுதிபகுதியாக வாடைக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், அக்கிராசனர் குறிக்கும் வீதப்படி குடியிருப்பராலேனும் வளவின் சொந்தக்காரராலேனும் வேதனங்கள் கொடுக்கப்படவேண்டும்:

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு வளவிலுள்ள சாய்காற்பகுதியை அல்லது அதின் ஒரு பங்கையும், அப்பகுதிக்குரிய மலசலகூடங்களையும் மற்றைய சுகத்துக்குரிய உபகரணங்களையும் சுத்தப்படுத்துவதற்கு (சாய்கால்களிலுள்ள தடைகளை எடுப்பதும் சாய்காற்பகுதியைச் சுத்தப்படுத்துவதாகவே கருதப்படும்) .. .. .. | 5 | 0 |

(2) வளவிற் சொந்தக்காரனேனும் குடியிருப்பவரேனும் கேட்டுக்கொண்டபடியால் அல்லது அக்கிராசனர் அவசியமென்று கண்டபடியால், வேலை நகரசங்கத்தாரால் செய்யப்பட்டதாயிற் முன் இவ்வேதனங்கள் கொடுக்கப்படவேண்டும். சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவர்கேட்டு வேலைசெய்யததானல் அக்கிராசனர் தமக்கிஷ்டமானல் வேலையின் முழுச்செலவையும் வரித்துப்பெற்றுக்கொள்ளலாம். அக்கிராசனரவசர மென்று கண்டபடியால் வேலைசெய்யப்படுவதானல், நகரசங்கம் அந்தவேலைசெய்யக் கருதியிருக்கிறதென்பதைப்பற்றியும் வேதனங்கள் வரிக்கப்படுவதைப்பற்றியும் சொந்தக்காரனுக் கல்லது குடியிருப்பவருக் கறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

III. அக்கிராசன ரவசியமென்று கண்டு செய்தவேலையின்பேரால் விதிக்கப்படும் வேதனத்தைக் கொடுக்கும்படி அக்கிராசனர் கேட்கும் கேள்விப்பத்திரம் பெற்று ஏழுநாளைக்குள் வேதனத்தைக் கொடுக்கத் தவறினவரெவரும் ஒரு குற்றத்தைச்செய்தவராவர். குற்றவாளியாகக் காணப்படும்போது இருபத்தைந்து ரூபாவுக்கு மேற்படாத அபராதத்துக் காளாவர்.

## இரண்டாம் பாகம்.

### சாய்க்கடைவேலை ஒப்பந்தக்காரர், உத்தரவுச்சீட்டுக்கள், நிபந்தனைகள், அபராதங்களை விஷயமாகக்கொண்டவை.

(1) அக்கிராசனரிடமிருந்து எழுத்தி லுத்தரவுபெறாமல், முறையா யதிகாரம்பெற்ற சங்கத் துத்தியோகத்தரல்லாத மற்றெவரும், சாய்கால்களையும் சாய்கால்களுக்குரிய உபகரணங்களையும் கட்டுதல் நிலைநிறுத்துதல் மாற்றஞ்செய்தலாகிய இவைகள் சம்பந்தமான எந்த வேலையையும் செய்யவும்படாது செய்விக்கவும்படாது. மேற்குறித்த உத்தரவை அக்கிராசனரிடமிருந்து பெற்றுக்கொண்டவர் அல்லது பெற்றுக்கொண்டவர்கள் சாய்க்கடை வேலை ஒப்பந்தக்காரர்களென்று இதன்பின் எடுத்துச்சொல்லப்படுவார்கள்.

(2) முன்கூறியவேலைகளைச் செய்வதற்கு எவர்களுக்கும் உத்தரவுகொடுபடுமுன், அவர்கள்—

(a) அக்கிராசனர் தங்களைக் கைவேற்று நடத்தும்படி உத்தரவுப் பத்திரத்திலதிகாரம் கொடுக்கிற வேலையைப்பற்றியல்லது அதுபோன்ற வேலையைப்பற்றித் தங்களில் யாருக்காவது தங்களிடம் வேலையிலமர்ந்திருக்கும் யாருக்காவது, அநுபவத்தோடு கூடிய அறிவுண்டென்றும்.

(b) வேலையைச்செய்து முடிப்பதற்கு வேண்டிய தகுந்த ஆயிதங்கள் இயந்திரங்கள் சாமான்கள் போதியளவுக் கிருப்பதோடு தகுதியான வேலைத் தலமு மொன்றுண்டென்றும், அக்கிராசனரைத் திருப்திசெய்துகொள்ள வேண்டும்.

(3) பின்வரும் நிபந்தனைகளுக் கடக்கமாகவே சாய்க்கடை வேலை ஒப்பந்தக்காரருக்கு ஒவ்வொரு உத்தரவுப் பத்திரமும் கொடுக்கப்படும்.

(a) உத்தரவுப்பத்திரம் எவ்வளவுகாலத்துக்கு பெலமுடையதாய் வழங்குமென்றும், உத்தரவுப்பத்திர முடையோர் எவ்வகையான வேலையைக் கையேற்று நடத்துவதற்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறார்களென்றும், பத்திரத்திற் குறிக்கப்பட வேண்டும்.

(b) உத்தரவுப்பத்திரத்தை, உத்தரவுப்பத்திரகாரனுக்கு எழுத்துமூலமாய் விளம்பரஞ்செய்து எந்நேரமும் அக்கிராசனர் முற்றாய்த் தமதிஷ்டப்படியே யழித்துக்கொள்ளலாம்.

(c) அந்த உத்தரவுப்பத்திரத்தில் அவ்வுத்தரப்பத்திர முடையோனுடைய ஆபிசு எங்கே உள்ளதென்றும் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

(d) ஒவ்வொரு உத்தரவுப்பத்திரகாரனும் அக்கிராசனரிடம் 250 ரூபா கட்டுவதோடு அக்கிராசனருக்கு வருஷம் வருஷம் உத்தரவுப்பத்திர வேதனமாக 25 ரூபாவும் கொடுக்கவேண்டும்.

(e) இப்படிப்பட்ட உத்தரவுப்பத்திரம் கொடுப்பதினால், சாய்க்கடை வேலை ஒப்பந்தக்காரர் செய்த எந்த வேலைக்காகவாவது பிழையான வேலைக்காகவாவது அல்லது அவ்வித வேலைகளால் கட்டிடங்களுக்கேனும் ஆஸ்திகளுக்கேனும் வரும் எந்தப் பழுதுகளுக்காகவாவது எவ்விதமாயாவது அக்கிராசனர் உத்தரவாதியாகார்.

(4) ஒவ்வொரு சாய்க்கடைவேலை யொப்பந்தக்காரனும்—

1. நகரசங்கச் சட்டங்களிலும் அச்சட்டங்களின் பிரகாரம் இயற்றப்படும் உபவிதிகள் விதானங்கள் பிரமாணங்களிலும் உள்ள ஏற்பாடுகளுக் கிணங்கி நடக்கவேண்டும்.

2. தனது மேல்விலாசத்தில் ஏதும் மாறுதல்வந்தால் அல்லது ஆபீசு இடம்விட்டுப் பெயர்ந்தால், இவைகளை அக்கிராசனருக்கு அறிவிக்கவேண்டும்.

3. தாம் கையேற்றவேலை யெதையும் அளவுக்குமிஞ்சித் தாமதம்செய்யாது சீக்கிரமாயும் நன்றாயும் செய்து முடிக்கவேண்டும்.

4. அந்தவேலை சம்பந்தமாக நகரத்துச் சுகாதார இங்கினீர்செய்யும் நியாயமானவும் நியாயமுறையானவுமான கட்டளைகளெல்லாவற்றின் பிரகாரமும் நடக்கவேண்டும்.

5. சாய்க்கடைவேலைகள் மற்றை உபகரணங்கள் சம்பந்தமாகக்கண்ட எந்தப்பழுதையும் நகரத்துச் சுகாதார இங்கினீருக்கு அறிவிக்கக் கடப்பாடுடையவனாயிருக்கிறான்.

6. குழாய்கள், துணையிருப்புகள் உபகரணங்கள் மற்றச்சாமான்களையாவது சாய்க்கடை வேலைகளையாவது பரிசோதித்துச் சரிபிழைபார்ப்பதற்கு நகரத்துச் சுகாதார இங்கினீர் தேவைப்படும் உபகரணங்களை, நியாயமான அளவுக்கு வேண்டிய முயற்சிசெய்து அமைத்துவைக்கவேண்டும்.

5. தம்மிடம் வேலையிலமர்ந்திருக்கும் ஒருவர் 2 (a) என்றிலக்கம்பெற்ற உபவிதியிற் குறித்த யோக்கியதை பெற்றிருக்கிறாரென்ற நியாயங்கொண்டு ஒரு சாய்க்கடைவேலை ஒப்பந்தக்காரருக்கு யாதானுமோர் உத்தரவுப்பத்திரம் கொடுபட்டிருக்குமாகில், அப்படிப்பட்ட யோக்கியதையுள்ளவர் தமக்குக் கீழுள்ள வேலையைவிட்டு நீங்கும்போது, அவ்வொப்பந்தக்காரர் அக்கிராசனருக்கு இச்செய்தியை அறிவிக்கவேண்டும்.

6. நகரத்துச்சுகாதார இஞ்சினீருக்கு எழுத்தில் அறிவித்தல் செய்யாமல், எந்த ஒப்பந்தக்காரனும் இங்கே முன்கூறிப்போந்த வேலைகளெவையையும் செய்யவும் கூடாது; வேறு யாராவது உத்தரவுபெற்ற ஒப்பந்தக்காரர் செய்யும்படி கீழொப்பந்தமாகவேனும் வேறெவ்விதமாகவேனும் கொடுக்கவும்படாது.

7. இங்கு முன்கூறிப்போந்த சாய்க்கடைவேலைகளைச் செய்யும்போது, நகரத்துச் சுகாதார இஞ்சினீர் அநுமதி கொடாமல், எந்தக் குழாய்கள் துணையுறுப்புக்கள், உபகரணங்களையாவது சாமான்களையாவது ஒரு ஒப்பந்தக்காரனுமுபயோகிக்கப்படாது.

8. தமக்குக்கொடுத்த உத்தரவுப்பத்திரம் நீக்க அல்லது அழிக்கப்பெற்றவருக்கு அல்லது அக்கிராசனரால் உத்தரவுப்பத்திரம் மறுக்கப்பெற்றவருக்கு, எந்த ஒப்பந்தக்காரனும் தனது உத்தரவுப்பத்திரத்தின் ஏற்பாடுகளுக் கிணங்கச் செய்யும் வேலைகளெதினும், அக்கிராசனருக்கு அறிவித்து அனுமதிபெற்றன்றி வேலை கொடுக்கக்கூடாது.

9. ஒப்பந்தக்கார ரொருவர் இந்த உபவிதிகளி லெதையாவது மீறிநடந்தாரென்று அக்கிராசனர் அபிப்பிராயங் கொண்டால் அவ்வொப்பந்தக்காரர் மேலே 3 (d) என்றிலக்கமிட்ட உபவிதியின் பிரகாரம் கட்டவேண்டிய பணத்திலிருந்து 100 ரூபாவுக்குக்குறையாத தொகை, அக்கிராசனரது இஷ்டப்படி, பறிமுதலாக்கப்பட ஆளாவர் என்னும் நிபந்தனைக் கடக்கமாகவே, எந்தச் சாய்க்கடைவேலை ஒப்பந்தக்காரனுக்கும் உத்தரவுப்பத்திரம் கொடுக்கப்படுகின்றது.

## அரசாட்சியாரின் விளம்பரம்.

---

### "1892 ம் ஆண்டின் சிறுநகர சுகாதாரச்சட்டம்."

வட மாகாணம் மன்னார்டிஸ்திறிக் சுகாதாரசங்கத்தவரால் 1892 ம் ஆண்டின் சிறுநகர சுகாதாரக் கட்டளைச்சட்டத்தின் 9E பிரிவைச்சேர்ந்த 2 ம் கீழ்ப்பிரிவுக்கமையச் செய்யப்பட்டு அதிகாரசபையாருடைய ஆலோசனையோடு உத்தம தேசாதிபதியவர்களாற் பெலப்பிக்கப்பட்ட மேல்வரும் உபவிதிகள் சகலருமறியும்படியாக இததால் பிரசித்தம்பண்ணப்படுகின்றன.

உத்தமனாரது கட்டளைப்படி,

கொழும்பு, கலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
1921 ம் ௵ ஐப்பசிமீ 7 ௳.

கிறேய்ம் தொம்ஸன்.
கலோனியல் சக்கிறத்தார்.

---

### 9E 2 (*d*) ம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட துணைப்பிரமாணங்கள்.

சாப்பாட்டுக்கடைகளையும், கோதுமைஅப்பம் சுடுமிடங்கள் முதலியனவையும் பற்றிய துணைப்பிரமாணங்கள்.

20. (*a*) எந்தச் சாப்பாட்டுக்கடை, தேயிலை அல்லது கோப்பிக்கடைகளிலும் பாவிக்கப்படும் சீனி வாயகண்டதும் கண்ணாடி மூடிபோட்டதுமான போத்தல்களில் வைத்திருக்கப்பட வேணடும்.

20. (*b*) விற்பனவுக்காக வைக்கப்பட்ட உறட்டிகளும், சீனிசேர்ந்த பணியாரங்களும், மற்றுஞ் சாப்பாட்டுச்சாமான்களும், இலையான் முட்டாதபடி கண்ணாடியால் மூடப்பட்ட ஏதனங்களில் வைத்திருககப்படவேண்டும். சாப்பாட்டுச் சாமான்கள் இலையான்கள் அசுசிப்படுத்தக் கூடியதாய் வைத்திருக்கப்படாது. இவ்வேதனங்கள் நல்ல துப்பரவாய் வைத்திருக்கப்பட வேண்டும்.

20. (c) வடித்து மிஞ்சிய தேய், கோப்பி, பால் அல்லது மிஞ்சிய தீன் அல்லது குசினிஊத்தைகள் நிலத்தில் வீசப்படாமல் நல்ல ஏதனத்தில் வைக்கப்பட்டு நாள்தோறும் அகற்றப்படவேண்டும்.

20. (*d*) மன்னார் டிஸ்திறிக்கு சுகாதாரசங்கத் தலைவரிடமிருந்து ஒரு அனுமதிப்பத்திரம் பெறாமல் ஒருவரும் கோதுமைஅப்பம் சுடுமிடம் வைக்கப்படாது. கொடுபட்ட அனுமதிப்பத்திரத்தின் காலத்தை நியமிக்கிறதற்கும், கோதுமை அப்பஞ்சுடுமிடங்களைக் குறித்து சுகாதாரசங்கத்தால் செய்யப்பட்ட ஒழுங்குகளின்படி நடவாத எவருக்கும் அல்லது ஒரு தகுதியான நியாயஸ்தலத்தினால் முந்தின அனுமதிப்பத்திரம் அழிக்கப்பட எவருக்கும், ஒரு அனுமதிப்பத்திரம் கொடாமல்விடச் சுகாதாரசங்கத் தலைவருக்கு தத்துவமுண்டு.

கோதுமை அப்பஞ் சுடுமிடங்களைப்பற்றி சுகாதார சங்கத்தால் பண்ணப்பட்ட ஒழுங்குகளில் எதையும் அமைந்து நடக்காததற்காகக் கோட்டினால் இரண்டாம் அல்லது அதற்கடுத்த தரங்களில் குற்றவாளியாகக காணப்பட்டால் அககோட்டினால் இந்தப்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அழிக்கப்பட ஏதுவாகும்.

### 9 E 2 (*e*) ம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட துணைப்பிரமாணங்கள்.

22. (*a*) இறைச்சிக் கடையில் பாவிக்கப்படும் ஒவ்வொரு மேசையும் துத்தநாகத்தால் மூடப்பட்டிருக்கவேண்டும். அப்படிப்பட்ட மேசைகளும் இறைச்சி தறிக்கும் மரத்துண்டும், ஆயுதங்களும், சுத்தமாய் வைத்திருக்கப்படவேண்டும். பாவித்தபின் இவைகள தண்ணீரால் கழுவப்பட்டு உரமான சூடைப்பத்தால் தேய்க்கப்பட வேண்டும். இறைச்சி தூக்கும் கொளுக்கிகளெல்லாம் கழுவி மினுக்கியும், தூசு பிடியாதபடியும், வைத்திருக்கவேண்டும்.

22. (*b*) எச்சம், விற்பனவுக்குக் கூடாத இறைச்சி, கழிவு மாமிசம் முதலியன உடனே அகற்றப்படாவிட்டால், தமிரிட்டதுத்தநாக மூடியுள்ளதும் துத்தநாகம் உள்ளிடப்பட்டதுமான பாத்திரத்திரத்தில் வைத்திருக்கப்பட வேணடும். மூடியின் தமர்கள் இலையான் உட்செல்லக்கூடாத பருப்பமுடையனவாயிருத்தல் வேண்டும். இந்தப் பாத்திரம் பாவித்தபின் அதினுள்ளிருக்கும் சாமான் வீசப்பட்டும் கழுவப்பட்டும் துப்பரவாககப்பட்டு மிருக்கவேண்டும்.

### 9 E 2 (*t*) ம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட துணைப்பிரமாணங்கள் காட்டுக்காய்ச்சலைத் தடைபண்ணுவதற்கான துணைப்பிரமாணங்கள்.

36 (*a*) மூன்று நாட்களுக்கு மேலாக தங்களுடைய வளவுகளில் எந்தப் பாத்திரத்திலாகுதல் தண்ணீர் இருக்க ஒருவரும் விடப்படாது.

36. (*b*) ஏதேன் கிணற்றில் அல்லது தண்ணீர் நிற்கும் வேறு இடத்தில் நுளம்புக் குஞ்சுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அந்தத் தொந்தரவைக் குறைக்கிறதற்கான வழிவகைகளை விதிக்கிறதற்குச் சுகாதார சங்கத்தலைவருக்குத் தத்துவமுண்டு.

### சோடா லெமெனற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளும் செய்யும் இடங்களைப்பற்றிய துணைப்பிரமாணங்கள்.

44. சுகாதாரசங்க எல்லைக்குள், அச்சங்கத்தலைவருக்கு ஒரு மாசத்துக்குமுன் எழுத்து மூலமாக அறிவியாமல் ஒருவரும் விற்பனவுக்காக சோடா லெமெனற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளும் செய்யத் தொடங்கப்படாது.

45. ஏதேன் காலையிலிருந்து, அல்லது குதிரை மாலிலிருந்து, அல்லது மிருகங்களை இரவிலும் பகலிலும் வைத்திருககும் வேறு கட்டிடத்திலிருந்து, அல்லது ஏதேன் கக்கூசிலிருந்து ககககூசக குழியிலிருந்து 150 அடிககுள் சோடா லெமெனற்றும் அதைப்போன்ற மற்றக குடிவகைகளும் செய்யுமிடம் இருக்கப்படாது. இககுடிவகைகள் செய்யுமிடத்தினெந்தப் பகுதியாவது ஆட்கள் சீவிக்கும் வீடாகப் பாவிக்கப்படாது.

46. சோடா லெமெனற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளுஞ் செய்யுமிடங்களும் அவைகளைச் சுற்றியிருக்கு மிடங்களும் நன்றாய் வெளிச்சம் வரக்கூடியதாயும் நல்லாய் காற்று வரக்கூடியதாயும் மரத்தால் சீலிங் போடப்பட்டதாயும், சிமேந்து நிலமுள்ளதாயும் அழுக்குகளைக் கழுவித் தள்ளக்கூடியதாய் தக்கவிதமாய்க் கட்டப்பட்ட கான்களுள்ளதாயு மிருத்தல்வேண்டும். அழுககு தூசியில்லாமலும் துப்பரவாயும் அவ்விடங்களை வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இலையான் போகக்கூடாத பிறம்பான அறைக்குள் இனிப்புச் சாறுகள் செய்ய்ப்படவேண்டும். மேறசொல்லிய குடிவகைகள் செய்கிறதற்குப் பாவிக்கும் மருந்துச் சாமான்களும் மற்றுஞ் சாமான்களும் நல்லவைகளாயிருப்பதுமன்றி, அவைகளைச் செய்கிறதற்குப் பாவிக்கும் பாத்திரங்களும் இயந்திரங்களும் அதிக துப்பரவாய் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

47. சங்கத்தலைவரி னனுமதி பெற்றதும் அழுக்குப்படாது சரிவரப் பாதுகாக்கப்பட்டதுமான இடத்திலிருந்து மேற்சொல்லிய குடிவகைகள் செய்கிறதற்குப் பாவிககப்படும் தண்ணீர் எடுககப்படவேண்டும். அவ்விடத்திலிருந்து வேலைத்தலத்துக்கு கொண்டுபோகும் வழியில் தண்ணீர் அழுககுப்படாதமாதிரியா யிருக்கவேண்டும். மேற்சொல்லிய

குடிவகைகள் செய்கிறதற்குப் பாவிக்கப்படும் இயந்திரங்களோடு சேர்த்துக் கட்டி தூசு போகாவண்ணம் தடுக்கும் மூடி போடப்பட்ட வக்குகளில் தண்ணீர்விடப்பட்டு வைத்திருத்தல்வேண்டும்.

48. சோடா லெமெனற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளும் செய்கிறதற்குப் பாவிக்கப்படும் தண்ணீரெல்லாம் "ஜீயூவல்" என்ற வடிக்குள்ளால் அல்லது சங்கத்தலைவரா லேற்கப்பட்ட வேறு வடிக்குள்ளால் வடித்தெடுத்தல்வேண்டும். மேற்சொல்லிய வடிசூத்திரங்களோடு சேர்க்கப்பட்டிருத்தல்வேண்டும். சங்கத்தால் ஏற்கப்பட்ட பிரசித்தமான இடத்திலிருந்து தண்ணீர் எடுக்கப்படுங் காலத்தில் மேற்சொல்லிய பிரமாணத்தை விலக்குதற்கு சங்கத்தலைவர் அதிகாரமுடையவராயிருப்பார்.

49. சோடா லெமெனற்றும் அதைப்போன்ற மற்றும் குடிவகைகளும் செய்கிறதற்குப் பாவிக்கப்படும் எல்லாப் போத்தில்களும் வடிகட்டி எடுக்கப்பட்ட தண்ணீரினால் கழுவப்பட்டும் அதிக துப்பரவாயும் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

50. சோடா லெமெனற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளு மிருக்கிற ஒவ்வொரு போத்தலினும், என்ன குடிவகை யென்றும், செய்த இட மென்னவென்றும், செய்கிற தலத்தின் சொந்தக்காரனுடைய அல்லது சாய்ப்பினுடைய பெயரென்னவென்றும், செய்கிற இயந்திரசாலைக்கு சங்கத்தலைவரால் கொடுக்கப்பட்ட நொம்பர் என்னவென்றும் தெரிவிக்கக்கூடியதாய் ஒரு லேபல் ஒட்டியிருக்க வேண்டும்.

51. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட அல்லது கரப்பன்வியாதியுள்ள அல்லது தொற்றுவியாதியுள்ள ஆட்கள் ஒருவரையும் சோடா லெமெனற்றும் அதைப்போன்ற மற்றக்குடிவகைகளையுஞ் செய்கிற சாலையில் வேலைகுவைக்கப்படாது.

52. சோடாலெமெனற்றையும் அதைப்போன்ற மற்றுங் குடிவகைகளையும் போத்தலிலடைக்கும் வேலையை நடத்தும் எல்லா ஆட்களும் முகத்துக்கும் கழுத்துக்கும் இரும்புவலைக்காவல் பட்டைகளும் கைகளுக்கு தோற் கைமேசும் போட்டிருக்க வேண்டும்.

கிணற்றைப்பற்றிய துணைப்பிரமாணங்கள்.

53. சுகாதார சங்கத்தலைவருக்கு வேலைதுவங்க ஒரு மாதத்துக்குமுன் தன்னுடைய கருத்தைப்பற்றி அறிவிக்காமல் அல்லது கிணறு கிண்டுகிறதற்கு அல்லது கிண்டுவிக்கிறதற்கு சங்கத்தலைவரிடமிருந்து உத்தரவு எடுக்காமல் சுகாதார சங்கத்துக்குச்சேர்ந்த எல்லைகட்குட்பட்ட எந்த இடங்களிலும் யாதொருவரும் ஒரு கிணற்றைக் கிண்டவும்படாது கிண்டுவிக்கவும் படாது.

54. சுகாதாரசங்கத் தலைவர் இப்படியான செய்கை அவசரமென்று நினைக்குங்கால் குடிக்க அல்லது வீட்டுப் பாவிப்புக்காகத் தண்ணீரெடுக்கும் கிணரிருக்கும் வளவின் சொந்தக்காரருக்கு குத்தகைகாரருக்கு அல்லது குடியிருக்கிறவருக்கு அந்தக் கிணற்றின் தண்ணீரை இறைத்து கிணற்றைத் துப்பரவாக்கிச் சுகாதாரசங்கத் தலைவர் தேவையென்று நினைக்கும் பழுதுகளை நிவிர்த்திபண்ணும்படி எழுத்தினால் அறிவித்தல் கொடுப்பார். இந்த அறிவித்தலை 14 நாளைக்குள் கவனிககாமல் விடுகிறவர் குற்றவாளியாகக் காணப்படுவார்.

55. சுகாதாரசங்கத்தாரின் தீர்மானிப்பால் இப்படியான செய்கை சுகத்தின் பொருட்டு பிரயோசனமானதென்று நியமிக்கப்பட்டால் எந்தக்காணியின் சொந்தக்காறருக்கு குத்தகைகாரருக்கு அல்லது குடியிருப்பவருக்கு ஏதேனுமொரு கிணற்றைத் தூர்க்கும்படி அல்லது சுசீகரஞ்செய்யும்படி. சங்கம் அறிவித்தல் கொடுக்கலாம். சொந்தக்காரர், குத்தகைகாரர், அல்லது குடியிருக்கிறவர் இந்த அறிவித்தலின்படி 8 நாளைக்குள் செய்யக்கடமைப்பட்டவராயிருப்பார். அப்படியான கட்டளைக்குச்சொல்லப்பட்ட நாட்களுக்குள் அமையாதிருக்கிற சொந்தக்காரர, குத்தகைக்காரர் அல்லது குடியிருப்பவர் குற்றவாளியாகக் காணப்படுவார்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நுகேகொட டேசனுக்குக்கிட்ட களனிவல்லி றயில்வேயில் ஒரு ரேட்டு போடுகிற என்னுங் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 17,658. குறிச்சி—நுகேகொடவும் கிறில்லபன கிழக்கும்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 211 ம் இலக்கத்தின் பகுதி | ஒரு தென்னையுள்ளது .. | எச். டொன் மாத்தேலிசும் மற்றவர்களும் | 0 | 0 | 1·25 |
| 2 | ஷை .. | மூன்று தென்னைகளும் ஒரு பிலாவுமுள்ளது | ஷை .. | 0 | 0 | 5 72 |
| 3 | 213 ம் 214 ம் இலக்கங்களின் பகுதிகள் | ஒரு கிடுகுவீட்டு பகுதியும் ஒருகற்சிவரின் பகுதியும் | ஈ. பபாகாமி .. .. | 0 | 0 | 12·75 |
| 4 | ஷை .. | வெறுநிலம் .. | ஷை .. .. | 0 | 0 | 0·11 |
| 5 | 215 ம் இலக்கத்தின் பகுதி | 10 தென்னைகளும் ஒரு ரேட்டின் பகுதியுமுள்ளது | எல். மானிஸ் பெரீரா .. | 0 | 0 | 23·83 |
| 6 | 216 ம் ஷை .. | 3 தென்னைகளும் 2 பிலாவுமுள்ளது | பிறக்டர் இ. பி. எக்கநாயகா .. | 0 | 0 | 9·85 |
| 7 | ஷை .. | வெறுநிலம் .. .. | ஷை .. .. | 0 | 0 | 0·30 |
| 8 | 142 ம் ஷை .. | 8 தென்னைகளும் 2 கற்சிவரும் ரேட்டின் பகுதியுமுள்ளது | ஜே. டி. டிறீபேக் .. | 0 | 0 | 16 50 |
| 9 | 4 ம் ஷை .. | ஒரு தென்னையுள்ளது .. | ஜே. டி. யோக்கிம் .. | 0 | 0 | 1·56 |
| 10 | 3 ம் ஷை .. | 6 தென்னைகளும் கல்கிணற்றின் பகுதியுமுள்ளது | டி. யூலியானு பெரீரா .. | 0 | 0 | 6·62 |
| 11 | 6 ம் ஷை ... | 9 தென்னைகளுள்ளது ... | ரி. டி. எஸ். ஏ. டிசானுயக்கா .. | 0 | 0 | 7·88 |
| 12 | 6 ம் ஷை .. | வெறு நிலம் .. ... | றயில்வே டிபாட்மென்ற் .. | 0 | 0 | 1 |

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 13 | 7 ம் இலக்கத்தின் பகுதி | 2 கற்சிவரும், 2 கற்சிவரின் பகுதிகளும், கற்படிகளும், 9 தென்னைகளுமுள்ளது | கே. ஏ. டி. எஸ். அபையவர்தின .. | 0 | 0 | 10·12 |
| 14 | 7 ம் ஷை .. | ஒரு தென்னை உள்ளது .. | றயில்வே டிப்பாட்மென்ற் .. | 0 | 0 | 4·37 |
| 15 | 8 ம் ஷை .. | 5 தென்னைகளும், ஒரு கற்கிணறும் ஒரு கல்தொட்டியுமுள்ளது | எஸ். பி. பஸ்தியான் .. | 0 | 0 | 3·72 |
| 16 | 8 ம் ஷை .. | வெறுநிலம் .. .. | றயில்வே டிப்பாட்மென்ற் .. | 0 | 0 | 1·70 |
| 17 | 9 ம் ஷை .. | ஒரு தென்னை உள்ளது .. | எஸ். டோன பிறஞ்சுாமியும் என்னமொரு ஆளும் | 0 | 0 | 4·87 |
| 18 | 9 ம் ஷை .. | ஷை .. | றயில்வே டிப்பாட்மென்ற் .. | 0 | 0 | 3·07 |
| 19 | 10 ம் ஷை .. | 3 தென்னைகள் உள்ளது .. | டி. மாத்தேலிஸ் பெரீரா .. | 0 | 0 | 1·68 |
| 20 | 10 ம் ஷை .. | வெறுநிலம் .. | றயில்வே டிப்பாட்மென்ற் .. | 0 | 0 | 1·61 |
| 21 | 13 ம் ஷை .. | கல்லால்கட்டின ஓட்டுவீட்டின் பகுதியும் கொட்டிலுமுள்ளது | டி. வில்லியம் பெரீரா .. | 0 | 0 | 3·81 |
| 22 | 33 ம் ஷை .. | வெறுநிலம் .. .. | றயில்வே டிப்பாட்மென்ற் .. | 0 | 0 | 1·56 |
| 23 | 13 ம், 16 ம் இலக்கங்களின் பகுதிகள் | காலடிப்பாதையின் பகுதி .. | டி. வில்லியம் பெரீராவும், ரி. டி. எஸ். ஏ. டிசாநாயக்காவும் | 0 | 0 | 0·52 |
| 24 | ஷை .. | ஷை .. .. | றயில்வே டிப்பாட்மென்ற் .. | 0 | 0 | 0·11 |
| 25 | 16 ம் இலக்கத்தின் பகுதி | 8 தென்னைகளும், 3 கற்சிவரும், 2 கற்படிகளும், 1 ஓட்டால்வெய்ந்த கல்வீடும், கல்லால்கட்டின வாய்க்காலின் பகுதியும், மண்சிவர்களின் பகுதிகளும் றோட்டின் பகுதியுமுள்ளது | ரி. டி. எஸ். ஏ. டிசாநாயக்க .. | 0 | 0 | 12·97 |
| 26 | 16 ம் ஷை .. | வெறுநிலம் .. .. | றயிலவே டிப்பாட்மென்ற் .. | 0 | 0 | 1·38 |
| 27 | 17 ம் ஷை .. | 9 தென்னைகளும், 2 கற்சிவர்களும் படிகளின் பகுதியுமுள்ளது | டபிள்யு. எச். பெரீரா .. | 0 | 0 | 7·18 |
| 28 | 18 ம் ஷை .. | 4 தென்னைகளும் ஒரு கற்கிணறும், ஒரு கல்லுத் தொட்டியும், ஒரு கல்லுத் தொட்டியின் பகுதியுமுள்ளது | பி. ஓ. பெர்னன்டோ .. | 0 | 0 | 12·77 |
| 29 | 18 ம் ஷை .. | கல்லுத்தொட்டியின் பகுதியும் கல்நிலத்தின் பகுதியுமுள்ளது | முடி .. .. | 0 | 0 | 0·72 |
| 30 | 18 ம் 19 ம் ஷை .. | காலடிப்பாதையின் பகுதி .. | பி. ஓ. பெர்னன்டோவும், கே. ஏ. பெரீராவும் | 0 | 0 | 0·75 |
| 31 | ஷை .. | ஷை .. | முடி .. | 0 | 0 | 0·10 |
| 32 | 19 ம் ஷை .. | 4 தென்னைகளு, 3 பெலாவும் உள்ளது | கே. ஏ. பெரீரா .. .. | 0 | 0 | 5·94 |
| 33 | 19 ம் ஷை .. | வெறு நிலம் .. .. | முடி .. .. | 0 | 0 | 1·12 |
| 34 | 21 ம் ஷை .. | 5 தென்னைகளும், ஒரு கல்கிணற்றின் பகுதியும் உள்ளது | ஜே. றெட்லிக்கின் பெண்சாதி .. | 0 | 0 | 4·72 |
| 35 | 21 ம் ஷை .. | வெறு நிலம் .. .. | முடி .. .. | 0 | 0 | 1·06 |
| 36 | 22 ம் ஷை .. | 3 தென்னைகளும், கல்நிலத்தின் பகுதியும் உள்ளது | ஏச். ஜே. எவ். றெட்டிறிகோ .. | 0 | 0 | 3·65 |
| 37 | 22 ம் ஷை .. | ஒரு கற்கிணறும், கல்நிலத்தின் பகுதியும் உள்ளது | முடி .. .. | 0 | 0 | 0·96 |
| 38 | 23 ம் ஷை .. | 3 தென்னைகள் உள்ளது .. | ஏச். ஜே. எவ். றெட்டிறிகோ .. | 0 | 0 | 4 |
| 39 | 23 ம் ஷை .. | வெறுநிலம் .. .. | முடி .. .. | 0 | 0 | 0·64 |
| 40 | 24 ம் ஷை .. | 5 தென்னைகள் உள்ளது .. | சி. பி. பெரீரா .. | 0 | 0 | 9·34 |
| 41 | 24 ம் ஷை .. | இரண்டு கற்சிவர்களின் பகுதிகள் உள்ளது | முடி .. .. | 0 | 0 | 0·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஃறு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிலுப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஃறு டிசம்பர்மாசம் 8 ந் திகதியிலன்று 9 மணிக்கு அந்த இடத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தததமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1921 ம் ஆண்டு நவம்பர்மீ 8 ந் உ.

ஈ. பி. அலக்ஸ்சான்டர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஃறு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிறில்லவலவில் ஒரு சுயபாசை ஆண்பாடசாலை கட்டுகிறதற்காக என்னும் பகிரங்கதேவைககு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 17,675. குறிச்சி—நம்முத்துகல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அம்பககவத்த .. | 20 தென்னைகள் உள்ளது .. | டபிள்யு. ஏ. பஞ்சோகாமியும் மற்றவர்களும் .. | 1 | 0 | 29·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1921 ௵ டிசம்பர்மாசம் 5 ந் தேதியிலன்று 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1921 ௵ நவம்பர் ௴ 5 ந் ௳.

ஜே. ஜீ. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு அவிசாவலை றோட்டில் 23 ம் கட்டையடியில் கருங்கல் உடைக்கும் குவாறி ஒன்றுக்கு என்னும் பகிரங்க தேவைகசு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,685. குறிச்சி—கொஸ்கமபகால.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பேலர்வெற்றவத்தை .. | 3 தென்னைகளடங்கியது .. | முடிக்குரியது .. .. | 0 | 0 | 20·1 |
| 2 | ஷை .. | தென்னைகளும், மற்றும் மரங்களும் அடங்கியது | எம். ஏ. தேகிஸ் அப்புவும் மற்றவர்களும் | 0 | 3 | 24 |
| 3 | ஷை .. | 1 தென்னைஉள்ளது .. | முடிக்குரியது .. .. | 0 | 0 | 5 |
| 4 | ஷை .. | தென்னைகளும், மற்றும்மரங்களும், கூலிச்சனங்களின் வீடும் | எம். ஏ. தேகிஸ் அப்புவும் மற்றவர்களும் | 0 | 2 | 10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ௵-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ௵ மார்கழி ௴ 5 ந் தேதியிலன்று காலை 12 மணிக்கு இக்கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1921 ௵ கார்த்திகை ௴ 7 ந் ௳

ஈ. வீ. அலக்சான்டர்,
அரசாட்சி ஏசண்டு, மே. மா.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு-அவிசாவலை றோட்டில் 23 ம் கட்டையடியில் கருங்கல் உடைக்குங் குவாறி ஒன்றுக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,686. குறிச்சி—கொஸ்கமபகால.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிற்றுவியாடகும்புறவத்தை | கமுகுமரங்களும் மற்றுமரங்களுமுள்ளது | டி. ஜே. ஆர். குனவார்தனவும், வீ. டீ. சாளிஸ்வும் | 0 | 0 | 8·4 |
| 2 | பேல்வெற்றவத்தை | தென்னமரங்களும் மற்றுமரங்களுமுள்ளதும் ஓர் ஓலைக்குடிசையும் | டி. ஜே. ஆர். குனவார்தனவும் மற்றவர்களும் | 1 | 1 | 33·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவினபடி வேண்டிய பிரகாரம் நான் இதனைகொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உருத்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ௵ மார்கழி மாசம் 5 ந் தேதியிலன்று காலை 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1921 ௵ கார்த்திகை ௴ 7 ந் ௳.

ஈ. வீ. அலக்சான்டர்,
அரசாட்சி ஏசண்டு, மேல்மாகாணம்.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பகிரங்க வேலைப் பகுதியாருக்கு கூலிலாயங்கள் கட்ட என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 7,236. குறிச்சி—பாததும்பறையிலிருக்கும் கோணுவல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ராஜாவெல்லத் தோட்டம் .. | றப்பர் தோட்டம் .. | ராஜாவெல்லையில் செய்கைபண்ணும் கொம்பெனியார் லிமிற்றெட் | 0 | 2 | 4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஆண்டு டிசெம்பர் மாசம் 16 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1921 ம் ஆண்டு நவெம்பர்மீ 8 ந வ.

டீ. ஜீ. விலற்,
கண்டி டிஸ்திறிக்ற் உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மலகோமுவா குளத்துக்கு ஒரு தெருப் போடல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 1,317. கிராமம்—மலகோமுவா, மகாகல்பொடை எகொட கோறளையில் கிரியாவேகாற்பற்று.

| துண்டு இல. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| I 1036D | போகாகாகேனு .. | சேனை T. P. 297,263 இன் பகுதி .. | டிங்கிரிபண்டா மலகோமுவா .. | 0 | 0 | 20 |
| J 1036G1 | மடமலெண்டிகேனு | வெளிநிலம் T. P. 313,341 இன் பகுதி | ஏ. எம். அபயகுணரட்டின, எம் றன்காமி, மிஸ்சிஸ் பி. அபய ரத்தின | 0 | 0 | 39 |
| J 1036G2 | ஷை .. | சேனை ஷை .. | ஷை .. | 0 | 0 | 4 |
| L 1036D | வெனபிற்றிகே வத்தை | வெளிநிலம் T. P. 298,544 இன் பகுதி | எச். எம். றன்காமி .. | 0 | 0 | 7·5 |
| L 1036E | ஷை .. | ஷை ஷை .. | ஷை .. | 0 | 0 | 13 |
| J 1036C1 | மடமலெண்டிகேனு | ஷை T. P. 313,341 இன் பகுதி | ஏ. எம். அபயகுணரட்டின, டபிள்யு. எம். றன்காமி, பி. அபயரட்டின | 0<br>0 | 0<br>0 | 29<br>29 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனககுக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஆண்டு மாசிமாதம் 3 ந் தேதியிலன்று பின்னேரம் 1 மணிக்கு குருநாகல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த்தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1921 ம் ஆண்டு கார்த்திகைமீ 5 ந வ.

எப். ஜீ. ரிறல்,
வடமேற்கு மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பெட்டவா கிராமசங்க ரோட்டிலிருந்து டெடுறுஓயாவரைக்கும் ஒரு கிராமசங்க ரோட் திறத்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 5,028. கிராமங்கள்—பனகோமுவா, பறன்தறை, றலஓகியங்கா, மகாகல்பொடை மீகொடை கோறளையில் வேயுடைவிலிகாற்பற்றில்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ | றூ. | ப |
|---|---|---|---|---|---|---|
| 2 | இலுக்பிற்றியவெவகேனு .. | சேனை T. P 94,301 இன் பகுதி .. | ஏ. எம். அவுசதகாமி .. | 0 | 0 | 24·7 |
| 3 | ஷை .. | சிலபகுதியில் தென்னமரம் வைக்கப் பட்ட நிலம் | பேபிலிஸ் மென்டிஸ் .. | 0 | 0 | 30 |
| 4 | ஷை .. | ஷை .. | ஏ. எம். உக்குகாமி .. | 0 | 0 | 36·2 |
| 5 | சியம்பலகாகனமுலகேன .. | ஷை .. | உக்குஅம்மாவும் பண்டாவும் | 0 | 1 | 13·6 |
| 6 | கும்புகுறடிதிகேனு .. | சேனை T. P. 94,301 இன் பகுதி .. | அப்புகாமி ஆராச்சி .. | 0 | 0 | 1 |
| 7 | வெறலிகேனு .. | சிலபகுதியில் தென்னமரம் வைககப் பட்ட நிலம் | டபிள்யு. எம். பண்டா .. | 0 | 0 | 7·5 |
| 8 | ஷை .. | 13 தென்னமரம் நிற்கும் நிலம் .. | முடிக்குரிய நிலம், டபிள்யு. எம். பண்டாவும் புஞ்சிரு ளையும் செய்தது | 0 | 0 | 37·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஆண்டு மாசிமாசம் 3 ந் தேதியிலன்று பின்னேரம் 1 மணிகு குருநாகல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1921 ம் ஆண்டு கார்த்திகைமீ 5 ந வ.

எப். ஜீ. ரிறல்.
வடமேற்கு மாகாண அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் குருநாகலை பொல்காவலை றேட்டில் 12 ம் கட்டையில், றேட்டுக்கு கல் எடுப்பதற்காகவும், கூலிகளுக்கு வீடு கட்டவும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 632. கிராமம்—கல்பொடைகாமா, உடப்பொல ஒற்றுற்றை கோறளை, உம்பதேனிகாற்பற்று.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வெவைவத்தை .. | தென்னந்தோட்டம் .. | ஏ. கே. சாப்பு பொலிஸ் தலைமைக்காரன் | 1 | 1 | 31·2 |
| 2 | ஷை .. | வண்டில்பாதை .. | ஷை .. .. | 0 | 0 | 9·3 |
| 3 | சாப்புவாவத்தை .. | ஷை .. | ஈ. நதானியேல்ஸ் .. .. | 0 | 0 | 3 7 |
| 4 | ஷை .. | தென்னந்தோட்டம் .. | ஷை .. .. | 1 | 0 | 20 2 |
| 5 | ஷை | ஷை .. | கொழும்பு, டேமண்ட் பிறதேர்ஸ் .. | 0 | 0 | 21·6 |
| 6 | ஊடகாவத்தை .. | தோட்டம் .. | எஸ். பி. விஷயசூரிய நொத்தாரிசு .. | 0 | 0 | 13 6 |
| 7 | அண்டலிகொட்டுவாவத்தை | ஷை .. | கொடட்டில்பெடிகே சிறீமகா .. | 0 | 0 | 5 |

எடுத்துககொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனககுக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புககொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஹு மாசிமாசம் 3 ந் தேதியிலன்று பின்னேரம் 1 மணிககு குருநாகல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாகல் கச்சேரி,
1921 ம் ஹு கார்த்திகைமீ 5 ந் உ.

எவ். ஜீ. ரிரல்,
வடமேற்கு மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 7,995, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1921 ம் ஹு (நவம்பர்) கார்த்திகைமீ 11 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம, 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்ரன் துரை அவர்களிடம் கொழும்பிலிருககும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்ரன்,
விசேஷ உத்தியோகத்தர்.

கவனிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனும் உள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேன் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் தேவமெதிகாத்பத்துக் கிறத்தலானேக் கோறளையில் சியம்பலேவக் கிராமத்திலிருக்கு மித்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

இலங்கை யளவைப் பிரதமபடம் 1,805.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. | றூ. | ப |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெகேறகாவயேன்யாய .. | 20 | 0 | 5 | 19 | கோங்காமுலயேன .. .. | 5 | 0 | 7 |
| 2 | ஷை .. .. | 0 | 0 | 19 | 21 | அம்பகாமுலபில்லேவ (குளக்கட்டுக்குச் சேமிப்பு) .. .. | 0 | 0 | 24 |
| 3 | சியம்பலவெவேவ (குளமும் கட்டும்) .. | 14 | 2 | 27 | 26 | மாகவெவ (குளத்தின் பகுதி) .. | 0 | 1 | 14 |
| 5 | வெவஇகலயேன .. .. | 8 | 3 | 1 | 27 | மாகவெவ ( ஷை ) .. | 0 | 3 | 22 |
| 6 | கன்சப்பாவ றேட்டு (பகுதி) .. | 0 | 1 | 4 | | | | | |
| 11 | றேட்டு .. .. | 0 | 3 | 13 | | | | | |
| 14 | தலகாமுலயேன .. .. | 6 | 2 | 0 | | | | | |
| 18 | கன்சப்பாவ றேட்டு (பகுதி) .. | 0 | 0 | 29 | | | 57 | 3 | 5 |

எல்லைகளாவன: வடக்கு-குடகல்வெவக் கிராம வெல்லை, வல்பாலுவக் கிராம வெல்லை; கிழக்கு-காட்டவிலவிலிருந்து குன்னேலெம்புவுக்குப் போகும் கன்சப்பாவ றேட்டின் பகுதி, குன்னேலெம்புவக் கிராம வெல்லை; தெற்கு-குன்னேலெம்புவக் கிராம வெல்லை, மடயினைக் கிராம வெல்லை; மேற்கு-மடயினைக் கிராம வெல்லை.

கவனிப்பு.—மேற்குறித்த வெல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுக ளிவ்வறிவித்தலி னின்றும் விலககப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத்தொகையாகும் 16 ஏக்கர் 1 றூட் 15 பேட்சம் மேற்சொல்லிய 57 ஏக்கர் 3 றூட் 5 பேட்சகுள்ளு மடங்கவில்லை யென்பதையுங் கவனிககவேண்டியது :—

இலங்கை யளவைப் பிரதமபடம் 1,805.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | சியம்பலகாமுலபாலுவதத .. | 0 | 1 | 19 | A 17 | தமினகாமுலவத்த .. .. | 0 | 3 | 13 |
| 7 | தமினகாமுலவத்த .. .. | 0 | 2 | 20 | B 20 | கும்புக்காமுலவத்த .. .. | 0 | 2 | 4 |
| 8 | மயிலகாமுலவத்த .. .. | 0 | 1 | 30 | B 22 | அம்பகாமுலபில்லேவ .. .. | 0 | 0 | 20 |
| 9 | மயிலகாவத்த .. .. | 0 | 1 | 16 | B 23 | அம்பகாமுலவத்த .. .. | 0 | 1 | 6 |
| 10 | வெவயிகலவத்த .. .. | 0 | 1 | 7 | B 24 | இகலவெலவும் மெதகும்புறவும் .. | 5 | 3 | 23 |
| A 12 | கோங்காமுலவத்த .. .. | 0 | 2 | 11 | B 25 | பகலவெல .. .. | 3 | 3 | 36 |
| A 13 | தலகாமுலவத்த .. .. | 0 | 2 | 26 | | | | | |
| A 15 | அம்பகாமுலவத்த .. .. | 0 | 2 | 35 | | | | | |
| A 16 | கெற்றகலகாமுலவத்த .. .. | 0 | 2 | 29 | | | 16 | 1 | 15 |

* இங்கிலீசின் மூன்றாம் பாகம் 1485 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 113—1921.]

## காணி அளவையைப்பற்றிய அறிவித்தல்.

வடமத்திய மாகாணத்தில் முடிக்குரிய காணிகளை விலைக்குவாங்க அளப்பதற்கும் கேள்விப்பத்திரம் போடவேண்டிய பிரிவுகளின் விபரம்.

1. இத்தால் சகலரு மறியவேண்டியது முடிக்குரிய காணிகளை விலைக்கு வாங்குவோர் கேள்விப்பத்திரங்கள் பின்னால் காட்டியமுறையே கவனிக்கப்படும்.

2. மாகாணம் இக்காரியத்தை நடத்த மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.
முதலாம்பிரிவு.—குருஞ்சுற்று கல்பே மகாப்பொற்றுனே கனடற உன்டியான்குலமா கோறளைகள்.
இரண்டாம்பிரிவு.—உலகல்லே காலகம் நேகம்பக உண்டுறுவா கிருலாவ மாமினியா மாதம்புவா கோறளைகளும் தமன்கடுவாவும் எகொடபற்றுக்களும்.
மூன்றாம்பிரிவு.—விலாச்சிய நுவரகம் கடவற் எப்பவலவும் கென்டெக்கோறளைகளும்.

3. பிரிவு இலக்கம் 3, 1921 ம் ஆண்டு மார்கழிமீ 1 ந் திகதி மூடப்படும். இந்தப்பிரிவுகளில் வரும் காணிகளுக்குக் கேள்விப்பத்திரங்கள் மேற்சொல்லிய திகதிக்குள் அனுப்பவேண்டும். ஆனால் காணி விற்கிறதற்கு யாதும் தடையிருக்குமோ என்பதை அறிதற்கு கேள்விப்பத்திரங்களை அனுப்புவதை மேற்சொல்லியது தடைபண்ணமாட்டாது.

4. மூடப்படும் மற்றப்பிரிவின் இலக்கம் 1. அதற்கடுக்க மூடப்படும் பிரிவின் இலக்கம் 2. இந்த இரண்டு பிரிவுகளுக்குள் வரும் கேள்விப்பத்திரங்கள் சுறுக்கனுப்பவேண்டும்.

5. பிரிவு இலக்கம் 1 மூடப்படும் திகதி சில நாட்களில் பிரசித்தம்பண்ணப்படும் அந்தத் திகதியில் இலக்கம் 3 ம் பிரிவில் இருக்கும் வேலைகள் முடிந்ததென் றடையாளமாயிருக்கும்.

(கைச்சாத்திட்டது) ஏ. டபிள்யூ. சீமூர்,
கொவற்ணமேந்து ஏசண்டு, வடமத்திய மாகாணம்.

1921 ம் ஆண்டு கார்த்திகைமீ 2 ந் உ.

---

## சுப்பிரீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் அனுராசபுரம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1921 ம் ஆண்டு மார்கழி மாதம் 1 ந் திகதியாகிய வியாளக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

பிஸ்கால கந்தோர்,
1921 ம் ௵ கார்த்திகைமீ 7 ந் உ.

எஸ். பிலிப்ஸ்ஸன்,
உப பிஸ்கால்.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் அவிசாவெலை கேகல்ல டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1921 ம் ஆண்டு டிசம்பர்மாதம் 1 ந் திகதியாகிய வியாழக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இறெட்டினபுரி பிஸ்கால் கந்தோர்,
1921 ம் ௵ நொவம்பர்மீ 2 ந் உ.

எச். டபிள்யு. கொட்றிவான்,
பிஸ்கால்.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் வதுளை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1921 ம் ஆண்டு மார்கழி மாதம் 1 ந் திகதியாகிய வியாளக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

வதுளை பிஸ்கால் கந்தோர்,
1921 ம் ௵ கார்த்திகைமீ 5 ந் உ.

எச். சி. விஜேசிங்க,
பிஸ்காலுக்காக.

---

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.